**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 261 / 2022**

Deposition of RW - 2 Petitioner / Respondent solemnly affirmed by P.Saraswathi, Bench Clerk Grade-II of this court on 25.10.2024 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சேகர்** | Age | : | 58 |
| Father's Name | : | **சந்திரன்** | Village | : | **கரூர்** |
| Calling | : | **உதவி மேலாளர்** | Taluk | : | **கரூர்** |

**முதல் விசாரணை**

நான் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் உதவி மேலாளராக பணியாற்றி வருகிறேன். வழக்கு விவரங்கள் ஆவணங்கள் அடிப்படையில் தெரியும். எனது சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். TN 68 T 8784 என்ற எண்ணுடைய வாகனத்திற்கு எங்களுடைய நிறுவனம் வழங்கிய காப்பீடு சான்று பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் **அது எ.ம.சா-ஆ.1**. வழக்கறிஞர் மூலம் 1ம் எதிர்மனுதாரருக்கும், அவருடைய வாகன ஓட்டுநருக்கும் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சல் ரசீதுகளுடன் தாக்கல் செய்கிறேன் **அது எ.ம.சா.ஆ.2. வரிசை**. அந்த அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதை காட்டக்கூடிய அஞ்சல் ஒப்புதல் அட்டை - **எ.ம.சா.ஆ.3.** வாகன ஓட்டுநர் பெற்றுக்கொள்ள மறுத்து திருப்பியதை காட்டக்கூடிய அஞ்சல் உறை - **எ.ம.சா.ஆ.4** ஆகும். மனுதாரரின் மனு 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தை பொறுத்து தள்ளுபடிக்குரியதாகும்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாவிட்டாலும் கூட காப்பீடு நடப்பில் உள்ளதால்

இழப்பீட்டை 3ம் தரப்பாரான மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் வழங்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரருக்கு நஷ்டஈடு கொடுப்பதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக தெரியாத சங்கதிகளை தெரிந்தது போல் சொல்லி முதல்விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், முதல் விசாரணை வாக்குமூலம் ஏற்கதக்கதில்லை என்றாலும் சரியல்ல. மனுதாரருக்கு எங்களுடைய நிறுவனம் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.

(ஓம்.சி.சொர்ணகுமார்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.